ஆக. 15: ஆதிக்கம் ஒழிந்த நன்னாள்!

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா	சென்னை: ஆடி 30உ சனி	(14—8—54)	மலர்: 2
இலங்கையில் 10 சதம்	வெளியீடு: ஆடி 31உ ஞாயிறு	(15—8—54)	இதழ்: 53

வீர சரிதத்தின் பொன்னேடு!

விடுதலை வீரர்களுக்கு வணக்கம் செலுத்துவோம்!

வீணர்கள் ஆட்சியை ஒழித்து திராவிடம் பெற உறுதி கொள்வோம்!

சமத்துவ சமுதாயம் அமைப்போம்!

இரு எதிரிகளில் ஒருவன் ஒழிந்தான்!

டர்பனில் இந்தியர்கள் சூறையாடப்படுகின்றனர்!

'அமெரிக்க' கொள்ளைக் கூட்டத்தினர் பயங்கரச் செயல்கள்!

வெறியர்களிடம் சிக்கித்தவிக்கும் தமிழர்கள் நிலை?

ஜோகன்ஸ்பர்க், ஆக. 13—

டர்பனில் உள்ள இந்தியர்களையும், இந்தியக் கடைகளையும் வெள்ளையர்கள் புதுவிதமான முறையில் அச்சமூட்டி கொள்ளையிடுகின்றனர் என்று தெரிகிறது.

அமெரிக்க காட்டு கொள்ளைக் கூட்டத்தினர்போல் ஐரோப்பிய வெறியர்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று இந்தியர்களை அடித்து, மிரட்டி பணம் பறிக்கிறார்கள் என்று கேட்டாலிலிருந்து வெளியாகும் 'சண்டே டிரிபியூன்' என்னும் இதழ் எழுதியுள்ளது.

அப்பத்திரிகை மேலும் கூறுவதாவது:—

"டர்பன் நகரில் விக்டோரியா தெருக்களில் ஒரு சிறு 'சிகாகோ' நகரமே உருவாகியிருக்கிறது!

கொள்ளையடிப்பதை நோக்கமாகக் கொண்ட இந்த வெறியர்கள், இந்தியர்களிடம் 'தர்ம' காரியங்களுக்கென்று சொல்லியும் பணம் கேட்கிறார்கள்; இந்தியர்கள் பணம் தர மறுத்தாலோ, அல்லது போலீசில் தெரிவித்தாலோ, அப்படிச் செய்பவர்களும், அவர்களது குடும்பத்தினரும் கொள்ளைக் கூட்டத்தினரால் தாக்கப்படுகின்றனர்!

இதேபோல் கேப்டவுன், ஜோகன்ஸ்பர்க் என்ற நகரங்களிலும் நடைபெறுகிறது.

இப்பகுதிகளில் கௌரவமாக வாழும் இந்தியர்களிடம் பணம் கேட்டுத் தர மறுத்தாலோ, அல்லது, பணம் கேட்பவர்கள் உண்மையாக 'தர்ம' காரியங்களுக்காகத்தான் கேட்கிறார்களா என்று சந்தேகப்பட்டாலோ கொள்ளைக் கூட்டத்தினர், இந்தியர்களை அடித்துத் துன்புறுத்தி, முன்னர் கேட்ட தொகையை விட அதிகமானவற்றை அபகரித்துச் செல்கின்றனர்.

இக் கொள்ளைக் கூட்டத்தினர்களால், இந்தியர்கள் வாழும் பகுதியில், 'ஒரு பயங்கர ஆட்சி' நடைபெறுகிறது.

இக் கொள்ளைக் கூட்டத்தினரின் கொடுமைகளை, சிலர், தங்களுக்கு மனைவிமார்களைத் தேடிக் கொள்ளவும் பயன்படுத்துகின்றனர்.

தனக்குப் பெண் கொடுக்க மறுக்கும் இந்தியர் ஒருவரை, கொள்ளைக் கூட்டத்தினரிடம் கூறி, அவர்கள் உதவியினால் பெண்ணின் தந்தையைப் பயமுறுத்தி, தனக்குப் பெண்ணை திருமணம் செய்விக்குமாறு செய்துக் கொள்ளும் 'மாப்பிள்ளைகள்' அங்கே மலிந்துவிட்டார்கள்!

இந்தியப் படங்கள் திரையிடப்படும் சினிமா கொட்டகைகள் மூன்று கொள்ளைக் கூட்டத்தினர், கூட்டத்துடன் கலந்துவிடுகிறார்கள், வேண்டுமென்றே கலகமூட்டி, பின்னர் இந்தியர்களைத் தாக்கி, அவர்களை சூறையாடுகின்றனர்!

இக் காட்சிகள் அமெரிக்காவில் நடைபெறும் கொள்ளைகளைவிட மிகவும் பயங்கரமாகவும், கம்பத் தகுந்தது என்று கூறமுடியாத நிலையிலும் இருக்கின்றன!

தியாகிகள் நாள்!

இந்திய சர்க்கார் யோசிக்கிறது!

புதுடில்லி, ஆக. 13—

ஆண்டுதோறும், காந்தியார் மரணமடைந்த நாள் அன்று ஒரு நிமிட நேரம் எல்லா வேலைகளையும் நிறுத்தி, மௌனம் செலுத்தி, நாட்டின் சுதந்திரத்திற்காக உயிர் நீத்தவர்களுக்கு நினைவு தினம் கொண்டாட இந்திய சர்க்கார் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது.

திரு—தமிழர் பிரச்சினை:

பண்டித நேருவை சந்திக்க தூதுக் குழு செல்லும்

இதர கட்சிகளின் கூட்டுறவு பற்றி நேசமணி கருத்து

நாகர்கோவில், ஆக. 13—

"திருவாங்கூர் தமிழர் தலைவர்கள் பண்டித நேருவை சந்தித்து, திரு-தமிழர்கள் பகுதி பற்றிய நிலைமையை விவாதிக்க வேண்டும் என்ற யோசனையை திரு—தமிழர் தலைவர்கள் யோசனை செய்வார்கள்,"

என்று திரு—த. நா. கா தலைவர் நேசமணி கூறினார்.

திரு—த. நா. கா. தூதுக்குழு ஒன்றைக் கும் பேட்டியளிக்க தேதி ஒன்று நிர்ணயிக்கும்படி நேருவை அவர்கள் கேட்கக் கூடும். அப்படியில்லை யென்றால், நிலைமை அனுமதிக்குமாயின் ஆக. 23-ந் தேதி பார்லிமெண்டு கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நேசமணி டில்லி செல்வார். மற்றொரு பாராளுமன்ற உறுப்பினரான ஏ. நேசாக்கும் டில்லி செல்வார்; அச்சமயத்தில் நேருவைச் சந்திப்பதென முடிவு செய்யப்பட்டால் இந்த இருவருடன், மற்ற நான்கு திரு—தமிழர் தலைவர்களும் ஆகஸ்டு மூன்றாவது வாரத்தில் டில்லி செல்வார்கள் என்று தெரிகிறது.

அறம்போரில் இம்மாதிரி பலாத்கார சம்பவங்கள் நிகழுமென்று தான் எதிர்பார்க்கவில்லை என்று கூறியுள்ளார்.

பிற கட்சிகளுடன் சேர்ந்து கூட்டுக் கமிட்டி அமைக்க ஒப்புக் கொண்டதாக வெளியான செய்தியை அவர் மறுத்தார். மற்ற கட்சிகளுடன் இன்னும் பேச்சு வார்த்தை நடத்தவில்லை என்றும் அவர் கூறினார். 'மற்ற கட்சிகளுடன், திரு—த. நா. கா. சேரக்கூடாது,' என்ற கருத்து நிலைமை இருக்கிறதாம்! குறிப்பாக கம்யூனிஸ்டுகளுடன் சேரும் நம்பிக்கை காணப்படவில்லையாம்!

மார்த்தாண்டத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களை ஒட்டி திரு—கொச்சி சட்டசபை உறுப்பினரும், குழித்துறை நகரசபை தலைவருமான வில்லியம் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

மதுவிலக்கு நிச்சயம் நீடிக்கும்

மந்திரியாரின் உறுதிமொழி

சென்னை, ஆக. 13—

"மதுவிலக்குத் திட்டத்தை கைவிடும் எண்ணம் சர்க்காருக்கு கிடையாது," என்று, டாக்டர் ஜான் கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில், மதுவிலக்கு மந்திரி பரமேஸ்வரன் இன்று நடந்த சென்னை மேல்சபைக் கூட்டத்தில் கூறினார்.

நாடோடியாக வந்தவனிடம் நாடு சிக்கிய விந்தை!

★

ஆகஸ்டு 15—ஆதிக்கம் ஒழிந்த நன்னாள்! ஆம்! இந்திய உபகண்டத்தை இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக அடிமைப்படுத்திவந்த, ஆங்கில ஏகாதிபத்தியம் ஒழிந்த நாள்—ஆகஸ்டு 15!

ஆண்டாண்டுகளாக அடிமைப்பட்டு வாழ்ந்து வந்த சமுதாயம், வீறுகொண்டு எழுந்து, போரிட்டு வெற்றி பெற்ற வீர சரிதத்தின் பொன்னேடு—ஆகஸ்டு 15!"

இந்த மகத்தான சாதனையில் பங்கெடுத்துக் கொண்டு, துறவு பூண்ட நிலையில் நாட்டிற்காக நமனையும் அஞ்சாது போரிட்டு வீரர் கோட்டம் நண்ணிய எண்ணற்ற தோழர்களை நினைவுபடுத்திக் கொண்டு, அவர்களுக்கு வீர வணக்கம் செலுத்த வேண்டிய நன்னாள்—ஆகஸ்டு 15!

முகலாயர்கள் ஆட்சியில் வியாபாரம் செய்ய வசதிகள் கேட்டு வந்து சேர்ந்த வெள்ளையன், பின்னும் நூறு ஆண்டுகளுக்குள் தன் ஆதிக்கத்தையே, இந்தியத் துணைக் கண்டத்தில் நிலைநாட்டி விட்டான்!

விலை பொருள்களை தோணியிலே ஏற்றிவந்த வெள்ளையன், திரும்பிப் போகும் போது இந்தியத் துணை கண்டத்து பொன்னையும் மணியையும் ஏற்றிச் சென்றது மாத்திரமல்ல; தன் நாட்டிலே தொழில் வளர்ச்சிக்குத் தேவையான மூலப் பொருளையும் ஏற்றிச் சென்றான்!

மூலப் பொருள், விலைப் பொருளாகத் திரும்பி வந்தது. முடிவு? நாடு, நாடோடியாக வந்தவனிடம் சிக்கியது!

கிழக்கிந்தியக் கம்பெனி வளம் பெற்று, பிரெஞ்சிந்தியக் கம்பெனியை ஒழித்தது; அறியாமையில் ஆழ்ந்து, தங்களுக்குள் பகைமையோடும் பொறாமையோடும் வாழ்ந்து வந்த இந்திய மன்னர்களை வீழ்த்தி, 'கம்பெனி ஆட்சி'யை நிறுவியது!

சாக்கடையில் விளையாடிய கிளைவ், இந்திய உபகண்டத்தை ஆண்டான்!

கொலைக்கஞ்சா வாரன் ஹேஸ்டிங்ஸ், 'இந்தியர் அடிமைகள்; இந்தியா, வெள்ளை முதலாளிகளின் சொந்த சொத்து,' என்றான்!

ஜாதி, மதம், மோட்சம், நரகம் என்று வேதம் ஓதியவர்கள் மகிழ்வெய்தினர். அவைகளை நம்பினோர் வாழ்விழந்து நாட்டிலே நடைபிணமாயினர்!

கம்பெனி ஆட்சி முடிந்தது; விக்டோரியாவின் தர்பார் ஆரம்பமாகியது. அதிகார பூர்வமான சுரண்டல் தொடங்கியது. 1857-லிருந்து 1947 வரை, தொண்ணூறு ஆண்டுகள், ஆங்கிலேயரின் ஆதிக்கத்தில் அடிமை வாழ்வில் கிடந்தனர், நடைபிணமாக, உழைத்து உருக் குலைந்தாலும், 'ஏன்?' என்ற கேள்வியை கேட்க பயந்து.

கடைசியில் பகலவன் உதித்தான்! புன்மை இருட்கணங்கள் போயின.

(4-ம் பக்கம் பார்க்க)

நினைவுக்கு வரவேண்டியது!

"இப்போது நான் ஆட்சியில் இருந்தால், சூயஸ் கால்வாயருகிலும், மத்தியக் கிழக்கு, மத்தியதரைக் கடல் முதலிய இடங்களிலும் அமர்த்தப்பட்டிருக்கும் படையில் சுமார் இரண்டு இலட்சம் துருப்புகளை இந்தியத் துணைக் கண்டத்திற்குள் அனுப்பி, அங்கு அமைதியை நிலவச் செய்து, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அதிகாரத்தை நிலை நாட்டியிருப்பேன்!"

—பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் 1947-ல், இந்திய சுதந்திரத்தைப்பற்றியவிவாதத்தின்போது, அப்போது எதிர்க் கட்சித் தலைவராயிருந்த வின்ஸ்டன் சர்ச்சில் பேசியது.

நம் நாடு

திராவிட முன்னேற்றக் கழக அதிகாரபூர்வ ஏடு

சென்னை 14—8—54 சனி

ஆரம்ப வேலைகள்!

"சிங்மன் ரீயின் படைகளுட னும், சியாங்கின் துருப்புக ளுடனும், செஞ்சீனாவின் மீது படையெடுக்க வேண்டும்."

—அமெரிக்க செனட்டர்

* * *

"எனக்குத் தேவையான கப் பற்படைகளையும், விமானங்க ளையும், யுத்தத் தளவாடங்களை யும் கொடுங்கள்; இப்போழு திருக்கும் ஆறு லட்சம் கொரி யத் துருப்புகளை இரட்டிப்பாக் கிக்கொண்டு, கொரியாவை விட்டே இந்தக் கம்யூனிஸ்டு களை விரட்டி விடுவேன்! இனி தாமதிக்கும் ஒவ்வொரு விநாடியும் வீணாகும்!!"

—சிங்மென் ரீ

☆

இந்த இரண்டு அறிக்கை களும் அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனிலிருந்து வெளி யிடப்பட்டவை!

சுமார் ஐம்பதினாயிரம்வெள் ளையர்களும், ஒரு லட்சத் திற்கு மேற்பட்ட கொரியர் களும் உயிரிழந்தபின், நிறுத்தி வைக்கப்பட்ட யுத்தத்தை மறுபடியும் ஆரம்பிக்கத் துடிக் கிறார் சிங்மென் ரீ!

ஜினீவாவிலே கூடியவர்கள், பெரும் பாடுபட்டு கொண்டு வந்திருக்கும் 'நம்பிக்கையான சூழ்நிலை' வளர்ந்து வரும் இந்த நேரத்தில்தான், ரீ, இந்த மாதிரி கர்ஜனை புரிகி றார்!

சென்ற வாரம் பூராவும் அமெரிக்க மண்ணிலே தங்கி, டாலர் ஏகாதிபத்தியத்தின் ஆடம்பரத்தை ருசித்துவிட்டு கொரியா திரும்பியிருக்கும் சிங்மென் ரீ, இந்த முறையில் பேசாமல் எப்படிப் பேசுவார்!

மக்கள் சுய உணர்வு பெற்று உரிமை முழக்கமிட்டு, ஏற்றத் தாழ்வுகளை ஒழித்த சமத்துவ சமுதாயத்தை உருவாக்கும் முறையாவது அமெரிக்காவிற் குக் கொஞ்சம்கூட பிடிக்காத விஷயம்! அதுவும் மேற்கத் திய நாடுகளுக்கு, மூலப் பொருள்களை உற்பத்தி செய் யும் ஆசியா, முன்னேற்றப் பாதையில் செல்வது வெள் ளையருக்கு ஏமாற்றத்தையும் கோபத்தையும் கொடுக்கிறது!

கை தளர்ந்து போன ஐரோப்பிய ஏகாதிபத்தியங் கள், தங்கள் காலனி முறையை மாற்றிக் கொண்டு, வேறு 'காமன்வெல்த்' என்ற முறை களில் தங்கள் ஆதிபத்தி யத்தை முடிந்த வரையில் பாதுகாத்துக் கொள்ளலாம் என்று நினைத்தால்கூட, அமெ ரிக்கா குறுக்கே நிற்கிறது!

அதுவும், சீனா, சிகப்பான பிறகு, அமெரிக்கா, தன் முழுத் திறமையையும் காட்டி ஆசியாவில் ஆதிக்கம் புரிய நினைக்கிறது!

சிங்மென் ரீயைத் தூண்டி விடுகிறது!

சியாங்-கே-ஷேக்கிற்கு ஆக் கம் தந்து, செஞ்சீனாவைத் தாக்கத் திட்டமிடுகிறது!

ஆசியாவில், தென் கிழக்கு ஆசிய பாதுகாவல் படையை அமைத்திட திட்டமிடுகிறது!

ஆஸ்திரேலியா, நியூஜிலந்து, அமெரிக்கா முதலிய மூன்று நாடுகளையும் சேர்ந்த படைக் குழுவை நியமிக்கிறது!

இந்தோ-சீனா ஒப்பந்தத் தில் கையெழுத்திட மறுத்து, எந்த நேரத்திலும் தன் சௌகரியப்படி போர் தொடுக் கத் திட்டம் போடுகிறது!

இப்படி பல வழிகளிலும் செஞ்சீனாவிற்கு அரண் போட்டு, ஆசியாவில் ஆதிக் கம் புரிய எண்ணும் அமெ ரிக்கா, ஆசிய நாடுகளுக்கு ஏராளமான பண உதவியை யும் கொடுக்க முன்வருகிறது!

நாய்க்கு எலும்புத் துண்டு போடுவதுபோல, அவர்கள் கொடுக்கும் பணத்தை வாங் கிக் கொண்டு இந்த வெள்ளை ஏகாதிபத்தியங்களின் ஆதிக் கத்திற்கு அடிபணிந்திருக்க வேண்டும் ஆசியாக்காரர்கள், என்று எதிர்பார்க்கிறது!

இந்தக் கொள்கையின் முறைப்படிதான், இந்தவாரத் திலே புதியதொரு பேச்சு வார்த்தை வாஷிங்டனிலே தொடங்கப்போகிறது!

அதுதான், ஜப்பானுக்கு மார்க்கெட் பிடித்துத் தரும் திட்டம் தீட்டும் வேலை!

முதலாளித்துவ வாழ்க்கை முறை நீடிக்க லாபம் அதிகம் வர வேண்டும்; லாபம் அதி கம் வர வியாபாரம் பெருக வேண்டும்; வியாபாரம் பெருக 'மார்க்கெட்' வேண் டும்! இந்த 'மார்க்கெட்' கிடைக்காவிட்டால், தொழி லாளிக்குத் தேவையான கூலி யில்லை; கூலியில்லையேல் முத லாளிகள் அழிக்கப்படுவர்; கம்யூனிசம் நிறுவப்படும்!

இந்த சூழ்நிலைகள் உரு வாகாமலிருக்க, ஜப்பானுக்கு உதவ வேண்டிய அவசியம் இன்று வந்திருக்கிறது!

சென்ற யுத்தத்தின் தோல்வியடைந்ததின் காரண மாக, உலக மார்க்கெட்டில் ஜப்பானுக்கு இருந்த இடம் போய்விட்டது. அதற்கிருந்த இடத்தைப் பிடித்துக் கொண்ட பிரிட்டிஷ் வல் லரசோ, தன்னுடைய கட்டுப் பட்ட நிலையில், அந்த இடங் களை விடத் தயாராயில்லை. இந்த நிலை நீடித்தால், வறு மைப்பட்ட நிலையில், இன்னும் நீண்ட நாளைக்கு ஜப்பான் மக் கள் காத்துக்கொண்டிருக்க மாட்டார்கள்!

'இருக்கின்ற சொத்தை எல்லோரும் சரிசமமாகப் பங்கிட்டுக் கொண்டு, உழைத்து, தேவையான அளவு உண்போம்,' என்று கம்யூனிசம் பேச ஆரம்பித்து விடுவார்கள்.

இதை உணர்ந்தே இவ் வளவு காலமும் ஜப்பா னுக்கு 'உதவி நிதிகள்' கொடுத்து வந்தார்கள், அமெ ரிக்கர்கள்! ஆனால், 'உதவி நிதிகள்' தொழில் வளர்ச்சி பெற்ற நாடுகளில், தேவை யான பலனைக் கொடுக்காது என்பதை உணர்ந்துகொண் டனர். ஆகவே, கடன்பட்டு நெருக்கும் பிரிட்டனைக் கூட அலைந்து, ஜப்பானுக்கு மார்க்கெட் வாங்கிக் கொடுப் பதில் முனைந்திருக்கின்றனர்!

பிரிட்டன், ஆசியாவில் தனக் கிருக்கும் வியாபாரங்களில் ஒரு பகுதியை ஜப்பானுக்கு விட்டுக்கொடுத்தால், கம்யூனி சம் தடுக்கப்படலாம் என்று எண்ணுகிறது, அமெ ரிக்கா!

'தொழிற் புரட்சி' வேக மாக நடந்துவரும் ஆசியாவில் இன்னும் நீண்ட நாட்களுக்கு இந்த முறை பயனளிக்காது. முதலாளித்துவம் எவ்வளவு தான் உயர்த்தப்பட்டாலும் வளர்ந்துவரும் சீனாவும், மற்ற நாடுகளும் விரைவில் இந்தச் சமுதாய முறையையே ஆசி யாவை விட்டுத் துரத்திவிடும்!

இருந்தாலும், எதைச் செய் தாவது ஆசியாவில் பலவீன மடைந்த பல நாடுகளை செஞ் சீனாவைச் சுற்றி உண்டாக்கத் திட்டமிடுகிறது, அமெரிக்கா!

இவைகளெல்லாம் எதற் கென்றால், சீனாவும், சோவி யத்தும் கடைபிடிக்கும் கம்யூ னிசம் பரவாமலிருக்க வேண் டும் என்பதற்காகத்தான்!

முதலாளித்துவ முறை சரி யென்று சொல்லுமளவு உயர்ந்த தளத்திலே (?) இருப் பவர்களுக்கு அமெரிக்க அயல் நாட்டுக்கொள்கையின் தெளிவு தெரியலாம். ஆனால் நமக்குத் தெரிவதெல்லாம், சிங்மென் ரீ போன்ற சில்லறை ஆசாமி களைத் தூண்டிவிட்டு, செஞ் சீனாவுடன் வீண் மோதுதலை யும், உலகப் போருக்கு ஆரம்ப வேலைகளை செய்வதும் தான் அமெரிக்காவின் அயல் நாட்டுக்கொள்கையோ என்று நினைக்க வேண்டிய அளவில் இருக்கிறது.

இப்படி இருக்கும்பொழுது "நாங்களாக போர் ஆரம்பிக்க மாட்டோம்!" என்று பேசி யிருக்கிறார் ஐசன்ஹோவர்! ஐசன்ஹோவரின் அரசாங் கத்தின் செயலுக்கும் அவரு டைய வார்த்தைகளுக்கும் எந்த சம்பந்தமும் காணோம்!

ஒரு ரீயும், செனட்டாகவ் வெகும்வெளிப்படையாக சீனா மீது படையெடுப்பைப் பற்றிப் பேசி விட்டதைக் கண்டு பயந்து, அதை மறைக்க இந்த அறிக்கையை ஐசன்ஹோவர் விட்டாரோ என்னவோ தெரியவில்லை!

ஆனால், ஒன்று மாத்திரம் நிச்சயமாகத் தெரிகிறது — ரீ போன்றவர்களைக் கூட 'போர்' என்று கர்ஜிக்குமளவு வாஷிங்டனின் சூழ்நிலை இருக் கிறது—என்று!

இந்தச் சூழ்நிலையில் இருந்துகொண்டு ஆசிய அரசி யலில் தலையிடுபவர்கள், எந்த நேரத்திலும் தவறு செய்ய லாம்; அப்படிச் செய்தால் உலகப்போர் இந்துமகா சமுத் திரத்திலே நடக்கும்! ஆகவே, இந்த அமெரிக்கர்களைப் பற்றி எச்சரிக்கையாய் இருக்கவேண் டும்!

மரண தண்டனை ஒழிப்பு

மத்தியசர்க்கார் யோசனை

கல்கத்தா, ஆக. 12—

மரண தண்டனை ரத்துசெய்வது பற்றி மத்திய அரசாங்கம் தீவிரமாக யோசித்து வருவதாகத் தெரி கிறது.

கடந்த 10 ஆண்டுகளில், இந்த தண்டனை பற்றிய விபரங் களுடன், தங்களின் கருத்தையும் அறிவிக்குமாறு மாநில அரசாங் கங்களுக்கு மத்திய அரசாங்கம் சுற்றறிக்கை அனுப்பி உள்ள தாகத் தெரிகிறது.

மேற்கு வங்கத்தில் கடந்த இரண்டாண்டுக் காலத்தில் அக் குத் தண்டனை மிகக் குறைந்து விட்டதாம். 1951ல் 5 சம்பவங் களும், 1952ல் ஒரே ஒரு சம்பவ மும் இருந்ததாம். 1953ல் யாருக்குமே அக்குத் தண்ட னையே தரப்படவில்லையாம்.

ஜப்பானில் பொருளாதார நெருக்கடி!

அமெரிக்கா, பிரிட்டன் உதவுவது பற்றி பேச்சு

ஜப்பானில் இன்று முற்றி வரும் பொருளாதார நெருக்கடி யைத் தடுத்து, ஜப்பான் பொரு ளாதாரத் துறையில் வீழ்ந்து படாமல் மீண்டும் வளர்ச்சி பெற உதவுதற்கான திட்டம் ஒன்றை உருவாக்குவதற்காக, இங்கிலாந் தும், அமெரிக்காவும் இந்த வாரத்தில் கூடிப் பேச இருக் கின்றன!

தென் கிழக்காசிய நாடுகளில் தன் வசமுள்ள ஏற்றுமதி மார்க் கெட்டுகளை, ஜப்பானுக்கு விட்டுக் கொடுக்க பிரிட்டன் முன்வர லாம் என எதிர்பார்ப்பதாக, அமெரிக்க அதிகாரிகள் தெரிவித் திருக்கின்றனராம்.

பிரிட்டன் அம்மாதிரி 'கஷ்டப் படும்' மார்க்கெட்டுகளை ஈடு கட்ட, அமெரிக்கா, சில பல சுங்க வரிகளை, சரிக்கட்டிக் கொண்டு, தனது மார்க்கெட் டில், பிரிட்டனுக்கு இடமளிப்பது பற்றி அமெரிக்கா பேச்சு வார்த் தைகள் நடத்தும் என்றும் தெரி கிறது.

முதல் 5 ஆண்டு திட்டத்தில் ரயில்வே அபிவிருத்திக்கு ரூ.400 கோடி செலவு

இரயில்வே மந்திரி தரும் தகவல்!

இந்திய ரயில்வேக்களின் அபி விருத்திக்காக முதல் ஐந்தாண் டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட் டுள்ள ரூ. 400 கோடியும் பூரா வாக உபயோகித்துக் கொள்ளப் படும். இதுவரையில், ஒதுக்கப் பட்ட மேற்படி தொகையில் ரூ 195 கோடி மட்டுமே செலவு செய்யப்பட்டுள்ளது. எஞ்சி யுள்ள இரண்டாண்டுக் காலத் திற்குள், மிகுதித் தொகை பூராவும், ரயில்வேக்களின் அபி விருத்தித் திட்டத்தை துரிதமாக நடைமுறைக்குக் கொண்டுவருவ தின் மூலம், உபயோகிக்கப் படும்," என்று இந்திய ரயில்வே மந்திரி லால்பகதூர் சாஸ்திரி வானொலி மூலம் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிவடையும்போது, வெளிநாடு களிலிருந்து வாங்கப்படுவதும், இந்தியாவிலேயே தயாரிக்கப்படு வதுமான 1,500 எஞ்சின்கள், 5,800 பெட்டிகள், 59,000 வாகன்கள் இவையெல்லாம் மக் களின் உபயோகத்திற்காக ரயில்வேயால் தரப்பட முடியும்.

பிரயாணிகளுக்கு அதிகமான சௌகரியங்களைத் தருவதற்கான வகையில் அதிகமான போக்கு வரத்து வசதிகளைச் செய்வதில் இந்திய ரயில்வே, கவனம் செலுத்தி வருகின்றது. ஏப்ரல் 1949 முதல் 1953 முடிய 756 புதிய ரயில் வண்டிகளும், 500-க் கும் அதிகமான வண்டிகள், நீண்ட தூரங்களுக்குச் சென்று திரும்ப ஏற்பாடுகளும், 'ஜனதா எக்ஸ்பிரஸ்' என்ற பெயரில் ஏராளமான வண்டி களும் விடப்படுகின்றன.

சென்ற ஆண்டில், முதல் வகுப்பை ஒழித்ததின் மூலம், மூன்றாம் வகுப்புப் பிரயாணிக ளுக்கு அதிகமான இட வசதி செய்து தரப்பட்டிருக்கிறது.

ஜப் பிரதமரைக் கொல்ல முயற்சி

மூன்றாம் முறையாக நடவடிக்கை!

"ஜப்பானியப் பிரதமர் யோஷிடாவை கொல்லத் திட்டமிட்டேன்" என்று கூறிய ஒருவனைக் கைது செய்திருப்ப தாக போலீசார் அறிவித்தனர்.

பிரதம மந்திரியின் வீட்டிற் குப் பின்புறமிருக்கும் கடற்கரை யில், கட்டாரியும், கைத்துப் பாக்கியும் வைத்துக்கொண் டிருந்த அவனை போலீசார் கைது செய்ததாகத் தெரிகிறது.

இதுவரை, இந்த ஆண்டில் மூன்று முறை ஜப்பானியப் பிரத மரின் உயிரைக் குடிக்க முயற் சிக்கப்பட்டதாம்!

இப்போது கைது செய்யப் பட்ட அந்தமனிதன "தொழிலா ளரின் வாழ்க்கைத்தரம் படு மோசமாயிருப்பதைக் கண்டிப் பதற்காகவே பிரதமரின் உயி ரைக் குடிக்க எண்ணினேன்" என்று கூறினானாம்!

பீகாரில் வெள்ளச் சேதம்

ரூ. 30 கோடியிருக்கலாம் என மதிப்பிடப்படுகிறது

நிவாரண வேலையில் மத்திய, மாநில அரசுகள் ஜரூர்!

பீகார் மாநிலத்தின் வடபகுதி யில் அண்மையில் ஏற்பட்ட வெள் ளத்தினால் ரூ 30 கோடி பெறு மான பொருள்கள் சேதமடைந் திருக்கலாம் என்று மதிப்பிடப் படுகிறது.

மத்திய அரசாங்க செய்தி இலாகா மந்திரி டாக்டர் கேஸ்கர், விமான மூலமாக வெள்ளத்தி னால் பாதிக்கப்பட்ட பிரதேசங் களைப் பார்வையிட்டுத் திரும்பி யுள்ளார். அவர், "பீகாரில் 1934-ல் ஏற்பட்ட பூமி அதிர்ச்சி யினால் விளைந்த சேதத்தைக் காட்டிலும் இப்போது ஏற்பட் டுள்ள சேதம் மிக அதிகமான தாகும். சர்க்கார் செய்கிற நிவா ரண வேலைகளுடன், தனிப்பட்ட நிறுவனங்களும், மக்களும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்க தாராளமாக உதவ முன்வர வேண்டும்," என கேட்டுக் கொண்டுள்ளார்.

நிவாரண வேலைகள் வெகு துரிதமாக நடைபெற்று வருவ தாகவும், மத்திய அரசாங்கமும் அதிகமான உதவிகளைச் செய்து தரும் என்றும் உறுதியளித்திருக் கிறாராம்.

இதற்கிடையில் பண்டித நேரு, நிரந்தரமாக வெள்ளம் ஏற் படாது தடுப்பதற்கான முறை கள் பற்றி யோசிப்பதற்கு பண உதவி செய்வதுடன் அதற்கான ஆராய்வதற்கான நிபுணர்களையும் தந்துதவ ஏற்பாடு செய்வதாக வும், அவற்றைப் பயன்படுத்திக் கொள்ள பீகார் அரசாங்க முதன் மந்திரி ஏற்பாடு செய்யவேண்டு மெனவும் குறிப்பிட்டுள்ளார் எனத் தெரிகிறது.

மற்றொரு யுத்தம் கோர விளைவுகளை உண்டாக்கும்!

விருந்தில் 'மருந்து' தருகிறார் மாலடோவ்!

மாஸ்கோ, ஆக. 12—

"உலகத்தில் மீண்டும் ஒரு யுத்தம் மூளுமானால், பிரிட்டன் பிரான்ஸ், ரஷியா ஆகிய நாடுகளுக்கு, மிகக் கோரமான விளைவுகள் ஏற்படும்; அத்தகைய ஒரு போர் இந்த மூன்று நாடுகளுக்கும் எந்தவிதமான பலனையும் தராது,"

—என்று சோவியத் வெளிநாட்டு மந்திரி மாலடோவ், பிரிட்டிஷ் வெளி நாட்டிலாகா காரியாலயத்தில் சீனு செல்லும் வழியில் வந்துள்ள பிரிட்டிஷ் தொழிற் கட்சி தூதுக் குழுவினருடன் நடைபெற்ற விருந்தொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மாலடோவின் இந்த அறிவிப்பு மேற்கு ஜர்மனியை ராணுவ மயமாக்குவது என்கிற பிரச்னையில் கருத்து வேறுபாடு கொண்டுள்ள தொழிற் கட்சியினருக்கு ஒரு மறைமுகமான எச்சரிக்கையாயிருந்தது.

மாலடோவ் மேலும், செஞ்சீனாவிற்கு ஐ. நா. சபையில் இடம் அளிக்க வேண்டிய அவசியம் குறித்தும், பிரிட்டன், சீனாவுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளும் எனத் தான் நம்புவதாகவும் குறிப்பிட்டார்.

"போரைத் தடுக்க போர் மூட்டுவது தவறு!"

அமெரிக்கத் தலைவர் பேசுகிறார்!

வாஷிங்டன், ஆக. 12—

சமீபத்தில் பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் பேசுகையில் ஜனாதிபதி ஐசனோவர் "உலகம் போர் ஏற்படாமல் இருக்க போர் செய்வது நடைபெறாத விஷயம்" என்று கூறினார்.

"இவ்வாறு ஓர் போர் தொடங்க வேண்டுமென்றால், பல நகரங்கள் அழிக்கப்பட்டு, பல்லாயிரக்கணக்கான மக்கள் இறக்க நேரிடுமென்றும், அதனைத் தாம் விரும்பவில்லை," என்றும் அவர் தெரிவித்தார்.

"தம் அபிப்பிராயம் ராணுவ அடிப்படையில் அமையவில்லை என்றும் அது நல்லொழுக்கம், அரசியல் நோக்கங்களினால் உருவானது," என்றும் அவர் குறிப்பிட்டார்.

"இன்றைய சூழ்நிலையில் இத்தகைய தடுப்புப்போருக்கு அவசியமில்லை," என்றும் அவர் அபிப்பிராயப்பட்டார்.

சென்னையில் 3,066 தற்கொலை!

சென்னை மாநிலத்தில் 1952-53-ம் ஆண்டில் மொத்தம் 3,066 தற்கொலைகள் நடைபெற்றிருப்பதாக நிதி மந்திரி அறிவித்தார்.

தற்கொலைகள் அதிகமாகக் குறிப்பிடப்பட்டிருப்பது மலபார் மாவட்டத்தில்தான். அங்கு 318 சம்பவங்கள் நடைபெற்றுள்ளனவாம்; மிகக் குறைவான தற்கொலை நிகழ்ச்சி நீலகிரி மாவட்டத்தில்தானும், அங்கு 32 மட்டுமே; கோவையில் 312 சம்பவங்களும், சேலத்தில் 311-ம் சென்னை நகரில் 119-ம் ஆக இந்த தற்கொலைச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

திருவள்ளுவர் விழாவும், திருக்குறள் வகுப்புத் திறப்பு விழாவும்

சென்னை பெத்துநாய்க்கன் பேட்டை தாய்மார் கழகத்தின் சார்பில், முத்துகிருஷ்ணன் தெரு, 15-ம் எண்ணுள்ள "பொன்னரங்கம்" என்னும் இல்லத்தில் 10—8—54 மாலை 4 மணிக்கு திருவள்ளுவர் விழா கொண்டாடப்பெற்றது. திருவாட்டி வ. பா. தாமரைக்கண்ணி அம்மையார், யாவரையும் வரவேற்று பேசுகையில் இக்கழகம் இதுவரை செய்துள்ள பல ஆக்க வேலைகளையும், கழகத்தின் வாயிலாக மேலும் பல அரிய நற்பணிகள் செய்ய இருப்பதையும் குறிப்பிட்டு, கழகத்தைப் பலரும் ஆதரிக்குமாறு வேண்டிக்கொண்டார்.

தலைமை தாங்கிய டாக்டர் எஸ். தருமாம்பாள் அவர்கள், தம் தலைமை உரையில், பெண்கள் இன்று ஆரம்பித்து வைக்கும் திருவள்ளுவர் வகுப்பில் எல்லோரும் சேர்ந்து பயன் அடைதல் வேண்டும் என்று கூறினார்.

பேராசிரியர் மயிலை சிவமுத்து வகுப்பைத் திறந்து வைத்துப் பேசுகையில், பெண்கள் வகுப்பின் இன்றியமையாமையையும், திருக்குறள் படிக்க வேண்டிய அவசியத்தையும் விளக்கினார். பின்னர் திருக்குறள் வகுப்பை நடத்தும் எஸ். கிருஷ்ணவேணி அம்மையார் துவக்கி வைத்தார்.

திருக்குறள் வகுப்பின் அவசியத்தைக் குறித்து திருவாட்டிகள் பார்வதி அம்மையார், பத்மாவதி அம்மையார், அனுசூயா மோகனசுந்தரம், ஆசிரியை அரையம்மாள் ஆகியோர் பேசினர்.

இறுதியில் வ. பா. தாமரைக்கண்ணி அம்மையார் அனைவருக்கும் நன்றி கூறி, இனி ஒவ்வொரு செவ்வாய் பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரை நடைபெறும் திருக்குறள் வகுப்புக்கு அனைவரும் வந்து மற்ற பெண்களுக்கும் இவ்வகுப்பினைப் பற்றி கூறி அவர்களையும் இவ்வகுப்பில் கலந்து கொள்ள வேண்டினார்.

சின்ன சேலம் ஊர்நல இளைஞர் கழகத் திறப்பு விழா

8—8—54 மாலை 4 மணிக்கு சின்ன சேலம் திரு. வி. க. திடலில் இருந்து ஊர்வலம் புறப்பட்டு மாலை 6 மணியளவில் திரு. பி. இரத்தினசாமி தலைமையில் திரு டி. என். குப்புசாமி கழக நோக்கங்கள் பற்றி பேசினார்.

தோழர்கள் சுப்பிரமணியம், பஞ்சாட்சரம், எம். அப்துல் ரகிமான், என். எப். ரகிமான், என். வேலாயுதம், ஏ. அம்பாயிரம் ஆகியோர் விளக்கவுரை ஆற்றினர்.

தாளமுத்து நடராசன் நினைவுப் படிப்பகம்

31—7—54ல் மாலை தாளமுத்து நடராசன் நினைவுப் படிப்பகத்தின் (தி. மு. க. கிளை) சார்பில், உறுப்பினர்கள் கூட்டம் தோழர் கி. கலைமணி தலைமையில் நடைபெற்றபோது, தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

இது நேர்மையா?

காங்கிரஸ் 'தளபதி'கள் போக்கு!

சூரப்பள்ளி தி. மு. கழகச் சார்பில் குப்பம்பட்டியில் நடந்த ஜூலையில் கழகப் பிரசார கூட்டமும், கலை நிகழ்ச்சியும் நடத்த கழகத் தோழர்கள் ஏற்பாடு செய்ததைத் தொடர்ந்து இரண்டு நாட்கள் அவ்வூர் இளைஞர் காங்கிரசைச் சேர்ந்த சிலர் குறுக்கீட்டினால் நடைபெற இயலவில்லை.

3—8—54-ல், ஒலிபெருக்கிகளுடன் 'மருத்தறிவு' ஆசிரியர் தோழர் ஜ. கண்ணன் தலைமையில் நடைபெற்ற கூட்டம் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. போலீசாரும் வந்திருந்தனர்.

1—8—54-ல் கழகத் துணைச் செயலாளர் தோழர் சி. குருநாதன் தனது சொந்த நிலத்தில் தி. மு. கழகக் கொடியை ஏற்றினார். அதை இளைஞர் காங்கிரசைச் சேர்ந்த சிலர் கூட்டமாக வந்து இவ்வூரில் தி. மு. கழகமே இருக்கக் கூடாதென்று பயமுறுத்தி கொடி மரத்தைப் பிடுங்கி எறிந்தனர். இச்செய்தியை சலகண்டபுரம் போலீசுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. கழகத் தோழர்கள் அமைதியைக் கடைபிடித்து வருகின்றனர் என்று செயலாளர் கு சித்தசாமி தெரிவிக்கிறார்.

சென்னை மாணவர் மன்றம்

8—8—54 மாலை 5 மணிக்கு மன்ற உறுப்பினர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. மயிலை சிவமுத்து அனைவரையும் வரவேற்று, வரும் ஆண்டுகளில் மன்றம் புரிய வேண்டிய ஆக்க வேலைகளை விவரித்தார். மன்றத் தலைவர் டாக்டர் எஸ். தருமாம்பாள் அவர்கள், மன்றத்தினர் நாட்டும் அன்புதான் தலைமை வகிக்கக் காரணமாயிருக்கிறது என்றார். மன்றத்திற்குஇடம் அமைத்துக் கொடுப்பது பற்றித் தீவிரமாகக் கவனித்து வருவதாகக் குறிப்பிட்டார். பண்டிதை என். கிருஷ்ணவேணி அம்மையார் குழந்தைகளுக்கு என நடத்தப்படும் போட்டிகளில் சில இடையூறுகள் உண்டாகின்றன என்றும், அதைமாற்றியமைக்க வேண்டும் என்றும் கூறினார். டி. ஆர். சீனிவாசாச்சாரியார் அக்கருத்தை ஆமோதித்தார். திரு. சுந்தரம் அவர்கள் மாணவர் மன்றம் விரைவில் திங்கள் இதழ் வெளியிட வேண்டிய அவசியத்தைக் கூறினார். திருமதி தாமரைக்கண்ணி அம்மையார் தாய்மார் கழகத்துக்காக மயிலை சிவமுத்து அவர்கள் செய்யும் உதவியைப் பாராட்டினார்.

பிறகு புலவர் கோ. வில்லபதி, அறிஞர் வக்லை பாலசுப்பிரமணியம் பி. ஏ முதலியோர் மாணவர் மன்றம் வரும் ஆண்டுகளில் மேலும் சிறப்புற ஒங்க பொறுப்புடன் செயலாற்ற வேண்டிய முறைகளை விளக்கிக் கூறினார்.

திருநெல்வேலி ஜில்லா

ஆதிதிராவிட மகாஜன சங்கம்

28—6—54 அன்று கோபால சமுத்திரத்தில் மேற்படி சங்கப் பொதுக்கூட்டம் தோழர் து அருணாசலம் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் எஸ். டி. சுப்பையா, பி ஜாண்தோஸ், வீ. ஏ. சுப்பையா, ஏ. டி. அரசு ஆகியோர் பேசினர்.

* * *

12—7—54ல் கோபால் சமுத்திரத்தில் தோழர் ஆறுமுகநயினாருக்கும் — தோழியர் மரோன் மணியம்மைக்கும் திருத்திய திருமணம் நடைபெற்றது. தோழர்கள் ஏ. எஸ். கேசவன், வீ. ஏ. சுப்பையா பாராட்டுரை வழங்கினர்.

ஏழைகள் நிறைந்த நாட்டில் ஏன் இந்த அநீதி?

கவர்னர் சம்பளக் குறைப்புப் போராட்டம் தேவை!

கண்ணியர்கள் தரும் கருத்துரைகள்

ஐயா,

ஆண்டொன்றுக்கு 9 லட்சம் ரூபாய் சென்னை கவர்னர் சம்பளமாக எடுத்துக் கொள்ளுகிறார் என்றும், சராசரி நாள் ஒன்றுக்கு ரு 2,500 ஆகிறது.

ஒரு வயதான கிழவர் பயிர் தொழில் செய்ய காலையிலிருந்து மாலைவரையில் பயிர்த் தொழிலில் உழைத்தால், அவருக்கு நாள் ஒன்றுக்கு 1—4—0 அல்லது 1—2—0 தான் கிடைக்கிறது; இதை கொண்டுதான் அவர் குடும்பம் நடத்தவேண்டும். இந்த ஏற்றத் தாழ்வை எவ்விதம் ஒழிப்பது? போராட்டத்தாலன்றி, வேறெதனாலும் அதை சரிகட்ட இயலாது.

இ. சு. கருணாகரன்,
செம்பனார்கோவில்.

★

ஐயா,

பட்டணத்தின் வீதிகளிலும், பட்டிகளின் ஓரத்திலும் பசி, பட்டினி என்று மக்கள் மாளவிக்கும் நிலை ஒரு பக்கம்; எச்சிலைக்காக நாயுடன் மனிதன் போராடும் நிலை மறு பக்கம்; வருங்கால அரசியலை நல்ல முறையிலே நடாத்தி செல்ல, மாணவர்களுக்கு அறிவு வளர்ச்சி ஏற்பட கல்வி பயில்விக்கும் ஆசிரியர்களுக்கும், அரசாங்க சிப்பந்திகளுக்கும் சம்பளம் போதாததினால் இன்னலுக்குள்ளாயிருக்கும் நிலை இன்னொரு பக்கம்; விவசாயிகளுக்கு தக்க பாதுகாப்பு அளிக்காத இந்த சர்க்காரிலே தன்னுடைய துணிவின் கதைகளை விற்று, பாவெட்டு நிலச்சுவான்தார்களுக்கு அளந்து கொடுத்துவிட்டு வானத்தை அண்ணாந்து பார்க்கும் நிலை மற்றொரு பக்கம்; இன்னும் எத்தனையோ எண்ணிலடங்கா அயரங்கள் நாட்டில் நிலவும்போது, ஆடம்பரத்திற்கும், அலங்காரத்திற்கும் பயன்படும் கவர்னர் பதவியை வைத்துக் கொண்டிருக்கும் ஒருவருக்கு பல லட்சக்கணக்கான ரூபாயை சம்பளம் என்ற பெயரால் கொட்டிக் கொடுப்பதை நாட்டின் நலனில் நாட்டம் கொண்ட அத்தனை பேரும் கண்டிக்காமல் இருக்க முடியாது. ஆகையினால் கவர்னர் சம்பளக் குறைப்பு போராட்டத்தை உடனடியாக துவக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பி. எ. கேங்காதரன்,
புளியங்குடி

★

ஐயா,

நமது நாடோ ஏழை நாடு! நிலைமையோ, பஞ்சம் பட்டினி, வேலையில்லாத் திண்டாட்டம்— என நிலவும்பொழுது, ஏன் இந்த குறுநில சொற்பனுக்கு இந்தக் கொள்ளை சம்பளம்?

போராட்டம் நடத்தி இந்தக் கொள்ளையர்கள் வாங்கும் சம்பளத்தைக் குறைத்து, சர்க்கார் பயன் பெறும்படி வகை செய்தால் ரு 25 முதல் ரு 100 வரை சர்க்கார் கடன் பத்திரம் வெளியிட வேண்டிய அவசியம் வராது. அநாவசியமான வட்டி முதலியவைகளும் சர்க்கார் சேமிக்க ஏதுவாகிறது; எனவே இந்தக் 'கொள்ளை சம்பளக் கோமானை' குடிகொண்ட கட்சியார் ஏற்கெனவே (பழைய காங்கிரஸ்) முடிவுசெய்தபடியே, மாதம் ஒன்றுக்கு ரு 500-க்கு மேல் போகாமல் ஏற்படுத்துமாறு வலியுறுத்த வேண்டியது நாட்டைப் பற்றிய நல்லெண்ணம் கொண்டவர்கள் கடமையாகும்.

ஆர். எஸ். இராமன்,
புத்தூர்.

ஐயா,

ஆங்கிலேயன் ஆண்டபோது, ஒரு ராஜ்ய அதிகாரம் அனைத்தும், நேரடியாக தங்களிடமே இருக்க வேண்டுமென்று எண்ணினான்.

அதற்காகவே, கவர்னர் என்ற ஒரு பதவியை ஏற்படுத்தி, அதில் வெள்ளையனையே நியமித்து, அவனிடம் அதிகாரம் அனைத்தையும் குவித்துக் கொடுத்து, அவனை தன் நேர் ஆட்சிக்கு உட்படுத்தி வைத்திருந்தது, பிரிட்டிஷ் அரசு!

அதன் பிறகு, கட்சி ஆட்சி ஏற்படுத்தி ஆளவேண்டிய நிலைக்கு, பிரிட்டிஷ் அரசு இறங்கியபொழுதும், அந்தக் கட்சி ஆட்சி தன் இச்சைப்படி, அடி ஆட்சி நடத்தவொட்டாமல் கண்காணிக்கவும் கவர்னர் தேவைப்பட்டார்.

இது அந்தக் காலம்!

இப்பொழுது மக்கள் ஆட்சி ஏற்பட்டுவிட்ட பிறகு, அதிகாரம் அனைத்தும் ஒரே இடத்தில்— ஒரே நபரிடத்தில் இருக்கவேண்டிய அவசியமில்லை; இருக்கவும் கூடாது. மக்கள் சபை நிறைவேற்றும் திட்டங்களை, செயல் முறைக்குக் கொண்டுவர வேண்டியது, அந்த மக்கள் சபை தேர்ந்தெடுக்கும் முதல்வர்—முதல் மந்திரி கடமை.

எனவே, இவைகட்கு அப்பாற்பட்ட ஒரு அதிகாரபீடம்—கவர்னர் பதவி வேண்டியதில்லை, இந்நாட்டில் மக்களாட்சி நடப்பது உண்மையானால்!

என் கருத்து, கவர்னர் பதவியே கூடாது என்பதுதான். இதற்கான அறப்போர் தேவைதான்.

தி. வ. அண்ணாமலை,
திருவண்ணாமலை.

★

ஐயா,

"எந்த அதிகாரிக்குமே 500 ரூபாய்க்கு மேல் சம்பளம் தரக் கூடாது" என்று கூறிய காங்கிரசார் ஆளவந்திருக்கின்றனர்; ஆனால் அவர்கள் ஆட்சியிலே இன்று கவர்னர் பதவிக்கு பத்து லட்சம் ரூபாயை கொட்டி அழுகிறது. எனவே மக்கள் வரிப்பணம் பாழாவதைத் தடுக்க தி. மு. கழகம் போராட்டம் நடத்துவதை வரவேற்கிறோம்.

10 தோழர்கள்
பொள்ளாச்சி.

★

ஐயா,

கவர்னரின் சம்பளம் குறைக்கப்பட வேண்டும் என்பதற்குக் காரணங்கள் பல தந்த பின்பும், தங்கள் நாட்டின் நிலைமையும், மக்களின் வாழ்க்கைதரத்தையும் கண்டும் காணாதது போல் நடக்கும் சுயநல எண்ணம் கொண்ட சூழ்ச்சிக்காரர்களும், மந்த மதியினரும் தவிர ஏனையோர் மறுப்புரை கூறார். நாட்டின்மீது நல்லெண்ணமும் மக்கள்பால் அன்பும் கொண்ட அறிவுடையோர் அறப்போரில் பங்கு கொள்ளவும் முற்படுவர்.

இராதாகிருஷ்ணன்,
திருப்பத்தூர்.

★

ஐயா,

நம் நாட்டு மக்கள் காலை முதல் மாலை வரை ஓயாது பாடுபடுகிறார்கள்; ஆனால் மாதத்திற்கு ரு 22—8—0-லிருந்து ரு 150-க்கு அதிகமாக பெரும்பாலான மக்களுக்குக் கிடைப்பதில்லை. ஆனால் கவர்னருக்கு ஆண்டொன்றுக்கு ரு. 998,000! நேர்மையா? நீதியா?

கே. லைகுமுகமது
புஞ்சைத்தியூர்.

சென்னை சட்டசபையில்.....

★

டிராம் ஓடுமா?

சென்னையில், நின்று போயிருக்கிற டிராம் போக்குவரத்தை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வருவது பற்றி, சட்டசபையில் விவாதம் நடைபெற்றது. டிராம் போக்குவரத்தை சென்னை நகரசபை எடுத்து நடத்த சர்க்காரிடம் கோரியுள்ள உதவி பற்றியும், டிராம்களை ஓடச் செய்வது குறித்தும் சர்க்கார் தீவிரமாக யோசித்து வருவதாகவும், அவை பற்றி இன்னமும் இறுதி முடிவு எடுக்கவில்லை என்றும் நிதி மந்திரி சுப்ரமணியம் தெரிவித்தார். "மந்திரி ராமசாமி (படையாச்சி) பொதுக்கூட்டமொன்றில், 'டிராம் போனது போனதுதான்; திரும்பி வராது,' என்று கூறவும், காமராசர், தொழிற் சங்கத் தலைக் குழுவிடம், 'சர்க்கார் யோசித்து வருகிறது; பொறுத்திருங்கள்' என்று கூறவும் இல்லையா?"—என்றபோது, கனம் ராமசாமி தனது சொந்த அபிப்பிராயத்தைக் கூறியிருக்கலாம் எனவும், சர்க்காரைப் பொறுத்த மட்டில், இந்தப் பிரச்சினை சர்க்காரின் பரிசீலனையிலிருக்கிறது என்றும் நிதி மந்திரி பதிலளித்தார்.

* * *

மதுவிலக்கு

மதுவிலக்கை அமுல் நடத்தும் பொறுப்பேற்றிருக்கிற மதுவிலக்கு அதிகாரிகளும், போலீசாருமே, சென்ற ஆண்டில் 28 சந்தர்ப்பங்களில் மதுவிலக்குச் சட்டத்தை மீறி மது அருந்திய குற்றத்திற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டனர் என்றும், இதை ஒழிக்க, ஒரு முறை மீறினாலே கடும் தண்டனையும், மறுமுறை மீறினால் பதவியையே பறித்து விட சர்க்கார் உத்தரவிட்டுள்ளதாகவும், மதுவிலக்கு மந்திரி பரமேஸ்வரன் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

• • •

தீண்டாமை ஒழிக்கப்பட்டதா?

சென்னை மாநிலத்தில் தீண்டாமையை ஒழிக்க 1,88,000 ரூபாய் செலவு செய்து 583 பொது மேடைகளை சர்க்கார் அமைத்தனர்—பொதுவான சமூக விழாக்கள் நடத்த, மக்கள் அவற்றைப் பயன்படுத்துவதின் மூலம், தீண்டாமை உணர்வு மக்களிடம் அற்றுப் போகும்படி செய்துவிடலாம் (!) என்ற நோக்கத்தில்! ஆனால், அதே மேடைகளை பெரும்பாலும் மக்கள் பயன்படுத்துவதே இல்லை; ஆகவே, மக்கள் அவற்றைப் பயன்படுத்தினால்தான், இந்த முயற்சி, தீண்டாமையை ஒழிக்கப் பயன்படுகிறதா, இல்லையா என்று சொல்லுவதற்கில்லை என்று மந்திரி பரமேஸ்வரன் தெரிவித்தார்.

சில இடங்களில் மட்டும், தாழ்த்தப்பட்ட மக்கள் பந்தல் அமைத்து, அந்த மேடைகளை திருமண மேடைகளாகப் பயன்படுத்திக் கொண்டனராம். இதற்கு மட்டுமே அந்த இரண்டு லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட அரங்கங்கள் பயன்பட்டன.

இதில் இன்னொரு விசேடம் என்ன தெரியுமா? அக்ரகாரங்களிலும் 'சேரி'களுக்கு முன் இம்மேடைகள் அமைக்கப்பட்டிருப்பதால் 'சாதி இந்துக்கள்' அவற்றை சென்று உபயோகிக்கக் கூட பயன் படுத்துவதில்லை என்று ஒரு உறுப்பினர் சபையின் கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கிறார்.

* * *

பங்களா இருந்தும் 'படி' வாங்குகிறார்களாம்!

முதன் மந்திரி காமராசர், கனம்கள் பக்தவத்சலம், சுப்பிரமணியம், இராமநாதபுரம் ராஜா, பரமேஸ்வரன் ஆகிய மந்திரிகள் மாதம் ஒன்றுக்கு ரூ 250 வீட்டு வாடகைப்படி பெறுகின்றனராம். இவர்கள் எல்லோரும் தங்களுடைய சொந்த பங்களாக்களில் வசிக்கிறார்களாம். என்றாலும், சட்டப்படி அவர்களுக்கு 'படி' பெற உரிமை உண்டு என்று நிதி அமைச்சர் அறிவித்திருக்கிறார். இவர்கள் எல்லாம் சர்க்கார் விடுதிகளில் வசிக்கவில்லை என்றும், சர்க்கார் ஊழியர்கள் வீட்டு வாடகைப்'படி' பெற்றால், உண்மையிலேயே வாடகை வீடுகளில் வசிக்க வேண்டும் என்னும் நியதி மந்திரிகளுக்குப் பொருந்தாது என்றும் நிதி அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

* * *

கோவில் விளக்குகளில் விளம்பரம்!

தென்னாட்டில் உள்ள 'தேவாலயங்கள்' பலவற்றில், ஆண்டவனின் சன்னதியில் அடியார்கள் பலர், அகல் விளக்குகளை அகற்றி விட்டு, அழகான 'மெர்குரி' விளக்குகளைப் போட்டு தங்களின் 'தர்ம சிந்தனை'யைக் காட்டிக்கொண்டிருப்பதுடன், இந்த தர்ம சிந்தனை எழுந்த உள்ளம் கொண்ட உத்தமர் இவர்தான் என்பதை ஊரார் அறிய விளக்குகளில், தங்களின் திருப்பெயரை விளம்பரம் செய்துள்ளார்கள் அல்லவா?

அண்மையில் மதுரைக்கு வருகை தந்த இந்தியத் துணைக் கண்டத்துப் பிரதமர் பண்டித நேரு அங்கிருந்த விளக்குகளில், விளக்கேற்றி வைத்த வித்தகர் தம் பெயரும் விளம்பரம் செய்யப்பட்டிருப்பதைக் கண்டு, கண்டித்தாராம். அந்தக் கண்டனத்திற்கு மதிப்பளித்து 'ஆண்டவனின்' திருச்சபையை அலங்கரிக்கும் விளக்குகளை 'கைங்கரியம்' செய்த கனவான்களின் பெயர்களை, விளக்குகளிலிருந்து அகற்றிவிட உத்தரவு பிறப்பித்திருப்பதாக மடாலய மந்திரி அறிவித்தார்.

* * *

ஆரம்பக் கல்வி

நடைமுறையில் இருந்து வரும் ஆரம்பக் கல்வித் திட்டத்தை பரிசீலனை செய்து சிபாரிசுகள் தர, சீக்கிரமே ஒரு பரிசீலனைக் குழு நியமிக்கப்படும் என்று கல்வி அமைச்சர் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்தார்.

• • •

குறுக்கெழுத்துப் போட்டி

மாநிலத்தில் குறுக்கெழுத்துப் போட்டிகளைத் தடை செய்வது பற்றி சர்க்கார் தீவிரமாக பரிசீலித்து வருவதாகவும், விரைவிலேயே ஒரு முடிவு காணப்படும் என்றும் நிதி மந்திரி அறிவித்தார்.

* * *

கடன் கேட்க மாட்டார்களாம்!

தேச அபிவிருத்தித் திட்டங்களை அமுலாக்க மத்திய அரசாங்கம் மக்களிடம் கடன் எழுப்புவதால், மாநில அரசாங்கம், அத்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக மக்களிடம் கடன் தருமாறு கேட்க மாட்டார்களாம்! இத்தகவலையும் வழக்கம் போல் நிதி அமைச்சரே சபையில் கேள்விக்குப் பதிலாக அளித்தார்.

* * *

கேள்விகள்?

சென்னை சட்டசபையில் 13-ம் தேதி காலை கேள்விகள் நேரத்தில் சுமார் 125 கேள்விகளுக்குப் பதில் அளிக்கப்பட்டது. உப கேள்விகள் எண்ணற்று எழுப்பப்பட்டன.

ஆக. 15: ஆதிக்கம்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'ஏன்?' என்ற கேள்வி விடுதலைத் தாகம் பெற்றவர்களிடமிருந்து பிறந்தது.

"நம் நாட்டிலே நாம் ஏன் அடிமையாய் இருக்கிறோம்?"

"ஆறாயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கும் வெள்ளையனிடம் இந்தப் பாரத உபகண்டத்தைச் சேர்ந்த நாம் அடிமைகளா?"

"நம் நாட்டின் பொன்னையும் மணியையும் எங்கிருந்தோ வந்தவன் சுரண்டுவதா?"

"எத்தன் ஏமாற்றுகிறான்; ஏமாளிகள் இருக்கின்ற காரணத்தால்!"

"அடக்குமுறை ஏவுகிறான், அதைக் கண்டு அஞ்சி ஓடுபவர் நம்மிடம் இருக்கின்றனர் எனது!"

"புறப்படுங்கள் உரிமைப் போருக்கு; புல்லர்கள் கொட்டம் அடங்க!" என்ற முழக்கத்துடன் சாவுக்கஞ்சா வீரர்கள் சிறைக்கோட்டம் நண்ணினர்; சவுக்கடிபட்டனர். வெஞ்சமர் சாக்காட்டின் விளையாட்டில் இறங்கினர்.

உலக யுத்தம் வந்தது. வெள்ளையனின் பிடி தளர்ந்தது, கை மழுங்கியது, உலக நிலையே மாறியது! அறியாமை நீங்கி, ஆவேசத்தோடு புறப்பட்ட மக்களை அடக்கியாள முடியாது என்று தெரிந்து, "இதோ புறப்பட்டேன்!" என்று மூட்டை முடிச்சுகளுடன் செல்லலானான், ஆங்கிலேயன்.

"நடந்ததை மறந்துவிடுங்கள்; இனி நண்பர்களாவோம்!" என்று கூறிச் சென்றான், 1947-ஆண்டு 15-ல்.

ஆண்டாண்டுகளாக ஆதிக்கம் புரிந்தவன் ஒழிந்தான் என்ற மகிழ்ச்சி ஆகஸ்டு 15-ல் ஏற்பட்டது. உலக வரலாற்றிலே பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய இந்நாளின் நாமும் உயிரோடிருந்தோமே என்ற பெருமிதம் விடுதலை வீரர்கள் மனதில் அளவற்ற ஆனந்தத்தைக் கொடுத்தது.

அதே நேரத்தில், வெள்ளையன் ஆட்சிக்கு முன்னால் தனித்து வாழ்ந்து வந்த 'திராவிடம்', இன்று, வடநாட்டு ஏகாதிபத்திய நாசகர்களிடம் ஒப்படைக்கப்படவிருப்பதையும், ஒழிந்த வெள்ளையனுக்கு நாம் மூலம் வைத்து வாவழைத்து முதலாளித்துவ சலுகைகள் அத்தனையும் அவியவதையும் கண்கூடாகக் கண்டனர் — திராவிடத்தின் விடுதலையில் ஈடுபட்டோர்!

வடவர் ஆதிக்கம் இருந்தாலும், ஆங்கிலேயன் ஆதிக்கம் ஒழிந்தது, விடுதலைப் போராட்டத்தில் முதல் கட்டம் என்பதை அவர்கள் உணர்ந்தனர்!

வடவர் ஒழிப்பும், திராவிட விடுதலையும், விடுதலையடைந்த திராவிடத்தின் சமத்துவ சமுதாயமும், அந்த சமதர்ம ஆட்சியை நிலைநிறுத்த இடைவிடாத கண்காணிப்பும், திராவிட விடுதலை வீரர்கள்முன் நிற்கும் மிகப் பெரிய கடமைகள். இந்தக் கடமையிலே நிறைவேற்ற முதல் தேவை, ஆங்கில ஆதிபத்திய ஒழிப்பு!

அது நடந்தது ஆகஸ்டு 15, 1947-ல்! அந்த நன்னாளை நினைவுபடுத்திக்கொண்டு வரும் காலத்தை நோக்குவோம்!

அந்த மகிழ்ச்சி நாளை நினைந்து, நம்பிக்கையோடு, திராவிட விடுதலை நாளை எதிர்நோக்கிக் கடமையாற்றுவோம்!

நம் அரசியல் போராட்டத்தில் அச்சம் போக்கி, அயர்வு நீக்கி, உணர்ச்சியூட்டும் இந்த இன்ப நாளில், இந்த முதல் படியை அமைத்துக் கொடுத்த விடுதலை வீரர்களுக்கு வணக்கம் செலுத்துவோம்!

அவர்கள் நினைவு, நம் வாழ்வை நாட்டு விடுதலைக்கு அர்ப்பணிக்கத் தூண்டட்டும்!

நெல்லைமாவட்ட தி.மு.க.
இரண்டாவது மாநாடு

★

11, 12—9—1954-ந் தேதிகளில் பாளையங்கோட்டையில் நடைபெறும்

11—9—54 சனி: சமூக சீர்திருத்த மாநாடு

தலைவர்: கண்ணதாசன்

துவக்குபவர்: புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன்

12—9—54 ஞாயிறு: அரசியல் மாநாடு

தலைவர்: ஏ. வி. பி. ஆசைத்தம்பி

துவக்குபவர்: தோழியர் பூங்கோதை

இசைப்பவர்கள்:

சிதம்பரம் சி. எஸ். ஜெயராமன், நாகூர் அனீபா குழுவினர்கள்

இரு நாட்களிலும் கலை விருந்துண்டு

மாநாட்டு நுழைவுக் கட்டணம்: நாள் ஒன்றுக்கு ரூ 1

இரு நாட்களுக்கும்: ரூ 5, 3, 2; பெண்களுக்கு ரூ 1

வ. கு. தலைவர்கள்:	செயலாளர்கள்:
எம். எஸ். சிவசாமி	எஸ். நடராசன்
சு. கந்தசாமி	அலிசேக்மன்சூர்
வினம்பர உறுப்பினர்கள்:	தொண்டர் படைத் தலைவர்கள்:
திராவிடமணி	மா. சண்முகம்
அப்துல் காதர்	எஸ். செல்லப்பாண்டியன்

பொருளாளர்: எம். வி. சூரியநாதன்

கழகக் கூட்டம்

★

சேரன்மாதேவி

(நெல்லை மாவட்டம்)

பாரதிதாசன் திடலில்

15—8—54 மாலை 7 மணிக்கு

பேசுவோர்:

எம். ஆர். கணேசன்

சங்கரலிங்கம்

சொற் பயிற்சி

15—8—54 மாலை 6 மணிக்கு நடைபெறும் தி. மு. கழகக் கட்டிடத்தில், அறிஞர் சொற் பயிற்சி மன்றத்தின் சார்பில் 'மேடைப் பேச்சு' என்னும் பொருள் பற்றி சொற் பயிற்சி நடைபெறும்.

சென்னை 20-வது வட்ட தி. மு. க. தோழர்கட்கு

15—8—54 காலை 10 மணி அளவில் 20-வது வட்டார தி. மு. கழக பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

'நண்பன்'—நாடகம்

17—8—54 இரவு கிம்பிசாரத்தில் தமிழர் கலை வளர்ச்சி நாடக மன்றத்தாரால் 'நண்பன்' என்னும் சீர்திருத்த நாடகம் நடைபெறும்.

கொடுங்கையூர் தி. மு. க. பொது உறுப்பினர்கட்கு

15—8—54 மாலை 6 மணிக்கு கொடுங்கையூரில் தோழர் மு. ராசன் தலைமையில் பொது உறுப்பினர் கூட்டமும், பொருளாளர் தேர்தலும் நடைபெறும்.

சிறையிலுள்ள அறப்போர் வீரர்கள்

ஜாமீன் கொடுக்கவில்லை?

நாகர்கோவில், ஆக. 13—

திரு—தமிழர் அறப்போரில் தண்டிக்கப்பட்டு திருவனந்தபுரம் மத்திய சிறையிலுள்ள தி. மு. கழகத் தோழர்களை நாஞ்சில் மாவட்ட தி. மு. க. செயலாளர் ஜான், இன்னும் சில தினங்களில் சந்திப்பார் என்று தெரிகிறது.

பாரிஸ் அரசியல்வாதி புதுவை வருகிறார்!

பம்பாய், ஆக 13—

பிரெஞ்சு ராஜதந்திரியான விண்டு பிரி ஜூக்சேசி செல்லும் வழியில் பம்பாய் வந்து சேர்ந்தார்.

பாரிசுக்குச் செல்லும், பிரெஞ்சு இந்தியக் கமிஷனர் மேனார்டேன் அவர் விமான நிலையத்தில் சந்தித்துப் பேசினார்.

பிரெஞ்சிந்திய சம்பந்தமாகவே அவர் வந்துள்ளார் என்று சம்பப்படுகிறது.

அன்பளிப்பு

லண்டன் நகரிலுள்ள நேரு...ஷ் பழனி 48 மணி நேரம் இடைவிடாது சைக்கிள் சவாரி செய்து வெற்றி பெற்றதற்காக 'நமது' வளர்ச்சிக்கு ரூ 1 ... அளித்தார்—பாராட்டுக்குரியது—பொறுப்பானவர்.

திராவிட முன்னேற்றக் கழகத் ... தோழர் இரா. செழியன், எம். ஏ. ... ... அரசியல் ... (திருவனந்தபுரம்) ... ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை ...